**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : – திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2025–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15–ஆம் தேதி திங்கட்கிழமை**

**இ.ம.எண்.4/2025 இன் அ.வ.எண்.225/2022**

1. K.வாசு
2. V.கார்த்திக் ... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/எதிர் /

யோகநாதன் ... எதிர்மனுதாரர்/ வாதி

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவானது கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.–ன் கீழ், மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 11.10.2022–ம் தேதி அன்று பிறப்பிக்கக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 24.06.2025 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 17.10.2025 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 15.12.2025 |
| மனுதாரருக்காக | : | திரு.R.M.செந்தில் – வழக்கறிஞர் |
| எதிர்மனுதாரருக்காக | : | திரு.S.சுதாகர் – வழக்கறிஞர் |

**1) மனுவின் சுருக்கம் :–**

இம்மனுவின் மனுதாரர் முதல் மனுதாரருக்காகவும், இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரும் அவரது தகப்பனாரான முதல் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாதியிடம் கடன் பெற்றதாக கூறி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பற்றுகை செய்யப்பட்ட நிலையில், மேற்படி ஒரு சக்திவேல் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினையும் பற்றுகை செய்துவிட்டபடியால், அதனையும் நீக்கம் செய்யகோரி மனுதாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்த நிலையில் மனுதாரரின் தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட, அவரை

மனுதாரர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றபடியால், கடந்த 06.01.2025ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராக இயலாமல் போய்விட, அதனால் அவர்களுக்கு எதிராக கடந்த 11.10.2022–ம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட, மேற்படி ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்யகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரர்கள் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய். எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. முதல் எதிர்மனுதாரரின் தகப்பனார் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்? என்ன நோய்க்கு சிகிச்சை பெற்றார்? என்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. மனுதாரர்கள் / பிரதிவாதிகள் பெற்ற கடன் தொகையினை எதிர்மனுதாரர் / வாதிக்கு செலுத்துவதற்கு காலம் தாழ்த்த வேண்டும் என்கின்ற நோக்கத்தினால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவின் மனுதாரர்களும் கோருரிமையாளரும் கள்ளக்கூட்டு சேர்ந்துகொண்டு பிரதிவாதிகளுக்கு ஆதரவாக கோருரிமையாளர் ஒரு மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரர்களின் மனுவினை எதிர்மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

3) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4) தீர்வு :–**

**4 (1)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவின் மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் மீது எதிர்மனுதாரர் / வாதியானவர் புரோநோட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட, கடந்த 11.10.2022–ம் தேதி மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால், அவர்களுக்கு எதிராக

அன்றைய தினமே ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட, மேற்படி ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்யகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4 (2) முதல் மனுதாரரின் தகப்பனாரான முதல் பிரதிவாதியானவர் எந்த மருத்துவமனையில் என்ன சிகிச்சை மேற்கொண்டார் என்பதற்கு எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் மீதான வழக்கினை எதிர்கொள்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டியது அவசியம். இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர் / வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை. தரப்பினர்களால் எழுப்பப்பட்டுள்ள இதர சங்கதிகளை பொறுத்து இம்மனுவின் இந்தருணத்தில் விவாதிக்க இயலாது. அவ்வாறு விரிவாக விவாதிக்கும் பட்சத்தில் அசல் வழக்கின் விசாரணை பாதிப்படையக்கூடும். எனவே, இம்மனுவினை தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில்கொண்டு எதிர்மனுதாரர்/ வாதியின் செலவு தொகையுடன் அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

5) **முடிவாக,** இம்மனுதாரர்கள் இருவரும் சேர்ந்து எதிர்மனுதாரர் / வாதிக்கு மனு செலவு தொகையாக ரூ.500/-ஐ வருகின்ற 03.02.2026-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும் என உத்தரவிடப்படுகிறது. **அழைக்க வாய்தா : 04.02.2026**

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
DN: cn=MUTHUSAMY ESWARAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.12.15 18:54:23 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :-** இல்லை
**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :-** இல்லை

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
DN: cn=MUTHUSAMY ESWARAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.12.15 18:54:27 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.